# வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்

**(போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு)**

பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள அத்துடன் உரிய தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டுள்ள பொருத்தமான பரீட்சார்த்தி ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**<u>தொழில்நுட்ப அத்தியட்சகர் பதவி – ஒப்பந்த அடிப்படை (01 வெற்றிடம்)</u>**

- **தகைமைகள்** : இலங்கை, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, கனடா, சீனா, இந்தியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, மலேசியா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா அல்லது அயர்லாந்து நாட்டினுடைய அல்லது உரிய சான்றிதழ்களை ஏற்றுக்கொள்வது தொடர்பாக இலங்கையுடன் இருதரப்பு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ள வேறு ஏதேனும் நாட்டினுடைய அரச கப்பற்றுறை நிர்வாக முகாமையொன்றினால் வழங்கப்பட்ட பிரதம பொறியியலாளர் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

  அத்துடன்

  3,000 கிலோ உவாற்றுகளுக்கு (kilowatts) அதிகமான பிரதான இயந்திர ஆற்றலைக் கொண்ட கடல்வழி பயணிக்கும் வியாபாரக் கப்பலில் பிரதம பொறியியலாளராக குறைந்தது 02 வருட அனுபவம்.

  அத்துடன்

  திருத்தவேலை முகாமைத்துவம் தொடர்பாக ஒரு கப்பல் கட்டும் தளத்திலோ அல்லது ஒரு கப்பல் கம்பனியிலோ குறைந்தது ஒரு வருட பிற்றகைமை அனுபவம்.
- **சம்பளம்** : 437, 500/- ரூபா கொண்ட மாதாந்தப் படி மேலும், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டவாறு மாதாந்த வாகன மற்றும் எரிபொருள் படி செலுத்தப்படும்.
- **வயதெல்லை** : 35 வயதிற்கு மேல்.
- **ஆட்சேர்ப்பு முறை** : நியமன அதிகாரியினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.

**தொழில் விவரணம்**

- கம்பனிப் பாதுகாப்பு மற்றும் தரம்சார் கைந்நூல்களிலும் முகாமையினால் வெளியிடப்பட்டவாறான ஏனைய அறிவுறுத்தல்களிலும் விதித்துரைக்கப்பட்ட நடைமுறைகளை அமுல்படுத்தல்.
- குறித்தொதுக்கப்பட்ட கப்பல்களுக்கான நியதிச்சட்ட மற்றும் வகுப்புத் தேவைப்பாடுகளுடன் இணக்கமுறுவதை உன்னிப்பாகக் கண்காணித்து உறுதிப்படுத்தல்.
- தரம்சார் தேவைப்பாடுகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு கப்பலிலுள்ள முகாமைத்துவக் குழுவுடன் இணைந்து குறித்தொதுக்கப்பட்ட கப்பல்களின் செயற்றிறன் மற்றும் நிலை ஆகியவற்றை முகாமித்தல்.
- ஆண்டுக்கு இருமுறை கப்பல் பரிசோதனைகளை நடாத்துதல் மற்றும் பரிசோதனை அறிக்கைக் குறைபாடுகளையும், உள்ளக அறிக்கைகள் மற்றும் உரிய திணைக்கள அறிக்கைகளிலிருந்து பெறப்பட்ட அவதானிப்புகளையும் தேவைக்கேற்ப பின்தொடர்தல்.
- திட்டமிடப்பட்ட பராமரிப்பு முறைமைக்கூடாக கப்பல்களின் வழக்கமான பராமரிப்பை கண்காணித்தல் மற்றும் பணிகளும் பதிவுகளும் இற்றைப்படுத்தப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தல்.
- மேம்பாடுகள் மற்றும் மாற்றியமைப்புகளுக்கான பகுதிகளை இனங்கண்டு, கப்பல்களின் வினைத்திறனான செயற்பாட்டிற்காக பரிந்துரைகளைச் செய்தல்.

- நியதிச்சட்ட தேவைப்பாடுகள் மற்றும் கம்பனி நியமங்களுடன் இணக்கமுறும் பொருட்டு அனைத்து உதிரிப் பாகங்கள், திருத்தவேலைகள், மாற்றியமைப்புகள் மற்றும் காலக்கிரம பழுதுபார்ப்புகளை ஒழுங்கு செய்தல்.
- கப்பல்களைக் கரையில் வைத்துப் பழுதுபார்க்கும் பணிகளைத் திட்டமிட்டு, அதில் கலந்துகொண்டு, குறித்தொதுக்கப்பட்ட கப்பல்களில் மேற்கொள்ளப்படும் திருத்தவேலைகள் மற்றும் மாற்றியமைப்புகளை மேற்பார்வை செய்தல்.
- குறித்தொதுக்கப்பட்ட கப்பல்களில் திருத்தவேலை/மாற்றியமைப்பு செயற்பாடுகளில் ஈடுபடும் மூன்றாம் தரப்பினர் சகலரும் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான கம்பனிக் கொள்கையுடன் இணக்கமுறுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு கப்பல் முகாமைத்துவக் குழுவுடன் இணைந்து பணியாற்றுதல்.
- உத்தரவாதக் குறைபாடுகளை உன்னிப்பாகக் கண்காணித்து, திருத்தவேலைகள் முடிக்கப்படுவதை உறுதி செய்தல்.
- கப்பல் இயக்கச் செலவு வரவுசெலவுத் திட்டங்களை விருத்திசெய்தல், கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்.
- தர முகாமைத்துவ முறைமை அபிவிருத்தியில் முனைப்புடன் பங்குபற்றல் மற்றும் திணைக்கள நடைமுறைகளின் தொடர்ச்சியான மேம்பாட்டுக்கான செய்முறையில் ஈடுபடுதல்.
- சம்பவ விசாரணைக் குழுவின் ஒரு பகுதியாக விசாரணைகளுக்கு உதவுதல்.

**இதர நன்மைகள்**

1. ஊழியர் சேமலாப நிதியம் (E.P.F) / ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (E.T.F.) நோக்கிய பங்களிப்பு – கூட்டுத்தாபனத்தினால்
2. உட்புற மற்றும் வெளிப்புற சிகிச்சைகளுக்கான சத்திரசிகிச்சை மற்றும் வைத்தியசாலைசார் காப்புறுதிக் காப்பீடு
3. முழுமையான தனிநபர் விபத்துக் காப்புறுதிக் காப்பீடு
4. தொடர்பாடல் செலவுகளை மீளளித்தல்

**பொது அறிவுறுத்தல்கள்**

- பிறப்புச் சான்றிதழ், உரிய ஏனைய சான்றிதழ்கள் மற்றும் உறவுமுறை சாராத இரு தொடர்பாளர்களின் முகவரிகள் என்பவற்றுடன் சேர்த்து உண்மைப் பிரதியென விண்ணப்பதாரியினால் சான்றுப்படுத்தப்பட்ட கல்வி / தொழில் சான்றிதழ்களின் பிரதிகளுடன் ஒன்றிணைந்த சகல விண்ணப்பங்களும் இவ்விளம்பரம் செய்யப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் (CSCL இன்) தவிசாளரிடம் சென்றடையும் வண்ணம் பதிவுத் தபால் மூலம் அல்லது chairman@cscl.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- தயவுசெய்து விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுக.
- அரச துறை நிறுவனங்களின் ஊழியர்களின் விண்ணப்பங்களானவை உரிய நிறுவனத் தலைவர்களிற்கூடாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- காலம் பிந்திய மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.
- நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் குழுவொன்றின் மூலம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றில் விண்ணப்பதாரிகள் மதிப்பிடப்படுவர் என்பதை தயவுகூர்ந்து கவனத்திற் கொள்க.

மேற்போந்த தேவைப்பாடுகளுடன் இணக்கமற்றிருத்தலானது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு வழிகோலும். எவ்வழியிலும் செல்வாக்கைப் பிரயோகித்தலானது தகைமையிழப்பாக அமையும்.

**தவிசாளர்**
**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்**
**இல: 27, MICH கட்டடம்**
**சேர் ராஷிக் பரீட் மாவத்தை (பிறிஸ்ரல் வீதி)**
**கொழும்பு 01.**

திகதி: 08.10.2025